International Journal for Multidisciplinary Research (IJFMR)
E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

# பாரதியும் சமூக நீதியும்

முனைவர் செ.முல்லைக்கொடி,

உதவிப் பேராசிரியர்,
தமிழ் முதுகலை மற்றும் உயராய்வுத்துறை,
எத்திராஜ் மகளிர் கல்லூரி,
சென்னை-8

சுவாமி விவேகானந்தர் எழுதிய 'புதிய இந்தியாவைப் படைப்போம்' என்ற நூலில் 'மன்னுயிரைத் தன்னுயிர் போல் நினைத்து அன்பு செய்யுங்கள். எல்லோருமே பிரம்மம் என்று சொல்லப்படும் அந்த எல்லையற்ற பரம்பொருளின்பல பாகங்களே என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்' என்பதற்கு ஏற்ப 'மண்ணில் யார்க்கும் துயரின்றிச் செய்வேன் வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்' என்று வாழ்ந்தவர் மகாகவி பாரதியார் .

பாரதியின் படைப்புகளைக் கூர்ந்து நோக்குங்கால் சமதர்மவாத சிந்தனைகளும், பொதுவுடமை கருத்துக்களும் நிறைந்துள்ளன. கடவுள் பற்றியும் கவிதை பாடுகிறார். தெய்வத்தை முழுதாகவே நம்புகின்றார். கடவுள் கருத்தும் பொதுவுடமை கருத்தும் முரண்பட்டு இவரின் படைப்புகள் ஒன்றுக்கொன்று எதிர்நிலையில் அமைந்தமைக்கு அக்காலச்சூழலும், அக்கால அரசியல் தலைவர்களுமே காரணம் எனலாம். விடுதலை இயக்கத்துக்குத் தலைமை தாங்கியவர்கள் தெய்வபக்தியில் திளைத்தவர்களாக விளங்கியதால் பாரதியாரின் படைப்புகளில் அது வெளிப்பட்டது எனலாம்.

தெய்வ நம்பிக்கை கொண்டு பராசக்தியிடம் வேண்டுகிறார், சரஸ்வதியிடம் வேண்டுகிறார். ஆனால் சாத்திரங்கள் எனக்கூறி சமூகநீதிக்கு எதிராய் வரும் மூடப்பழக்க வழக்கங்களை மூர்க்கமாய் எதிர்க்கிறார்."

எண்ணிலா நோயுடையார் - இவர்
எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்
கண்ணிலாக் குழந்தை கள்போல் - பிறர்
காட்டிய வழியிற்சென்று மாட்டிக் கொள்வார்;
நண்ணிய பெருங்கலைகள் - பத்து
நாலாயிரங் கோடி நயந்துநின்ற
புண்ணிய நாட்டினிலே - இவர்
பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார்.

என்ற பாடல் வரிகளில் பாரதியாரின் உணர்வு துடிப்பும் கருணைச்செறிவும் பீறிட்டு எழுகின்றன.

பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்க நான் துணிந்தேன்
மண்மீதுள்ள மக்கள்,பறவைகள்
விலங்குகள்,பூச்சிகள்,புற்பூண்டு,மரங்கள்;
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே,
இன்பமுற் றன்புடன் இணங்கிவாழ்ந் திடவே

செய்தல் வேண்டும்,தேவ தேவா!

என்ற பாடல் வரிகளை நோக்குங்கால் அளவிலா அன்பும் எல்லையற்ற கருணையும் வெளிப்பட்டு சக மனிதனிடமும் பிற உயிர்களிடத்தும் இதற்கு மேல் எவராலும் அன்பு கொள்ள முடியாது என்பதை உணர்த்தி விடுகிறது.

பாரதியின் படைப்புகளின் மையச்சரடாக சமூக நீதி அமைகிறது. கருணை,பொதுவுடைமைச் சிந்தனை ,சாதிக் கொடுமை எதிர்ப்பு, பெண் விடுதலைப் பேனல் உள்ளிட்ட பிரிவுகளில் இவரின் இலக்கியங்கள் அமைந்துள்ளதையும், பாரதியாரின் இலக்கியங்களின் வழியே சமூக நீதியின்பால் அவருடைய ஈடுபாட்டின் ஆழத்தைப் புரிந்து கொள்ள முடியும். பிற உயிர்களிடத்தில் கருணை இருந்தாலே சாதிக் கொடுமை என்ற எண்ணம் தோன்றாது.

"சாதி, மத பேதங்களைப் போக்க சாதியும், மதமும், சமயமும் தவிர்த்தேன். சாத்திர குப்பையும் தவிர்த்தேன்" என்று பாடியவர் வள்ளலார். சாதி, மத, பேதமற்ற சன்மார்க்கர்களாய் அனைத்து மக்களும் வாழவேண்டும் என்று வள்ளலார் விரும்பியதைப்போல பாரதியும் விரும்பினார்.

சாதி, மத, பேதம் கடந்த சமதர்மமே உண்மையான சுதந்திரம் என்பதை உணர்ந்த பாரதி 'சூத்திரனுக்கு ஒரு நீதி தண்டச் சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி; சாத்திரம் சொல்லிடுமாயின் அது சாத்திரம் அன்று சதி என்று கண்டோம்' என்று பாடியுள்ளார். சாதி என்னும் பொய்மையைத் தகர்த்தெறிய தன் கவியால் உலகதிர கவிமுரசு கொட்டியவன். கவியில் மட்டும் தன் புரட்சியைக் குறிப்பிடாமல் தன் வாழ்க்கையிலும் சமதர்மத்தைக் கடைப்பிடித்தவர் பாரதி என்பதற்கேற்ப பாரதிதாசன் ஒரு பாடலில் 'மேலவர் கீழவர் இல்லை இதை மேலுக்குச் சொல்லிடவில்லை... தோலினில் தாழ்ந்தவர் என்று சொல்லும் தோழர் சமைத்ததை உண்பார்' என்று பாரதியின் சமதர்ம வாழ்நிலையை எடுத்துக் கூறுகிறார்.

சாதியின் கொடுமையையும் அதனால் விளையும் சமூகக்கேடுகளையும் கவிதைகள் மூலம் வன்மையாக எதிர்க்கிறார். சாதிகளைப் போற்றுவதை விட முன்னேற்றத்திற்கு உழைப்போம் என்று பறைசாற்றுகிறார். ஆதிக்கக்காரர்கள் சாதாரண மக்கள் மீது நடத்தும் கொடுமைகள்,மற்றும் சாதிக் கொடுமைகள் , பெண்கள், குழந்தைகள், சாதாரண உழைக்கும் மக்கள் என்று பலவீனமாக உள்ளவர்களின் மீது நடத்தப்படும் கொடுமைகளை எதிர்த்து நிற்க வேண்டியது நமது கடமையாகும் என்று உரக்கப் பாடுகிறார்.

"பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம் பயங்கொள்ளலாகாது பாப்பா,
மோதி மிதித்து விடு பாப்பா - அவர் முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"என்று குழந்தைகளுக்கும்,

சாதிக் கொடுமைகள் வேண்டாம்; அன்பு

தன்னில் செழித்திடும் வையம்;

ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;- தொழில்

ஆயிரம் மாண்புறச் செய்வோம் ! - என்று இளைஞர்களுக்கும் எடுத்துக் கூறுகிறார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்

அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்

அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.. என்ற திருமூலரின் வாக்கிற்கு ஏற்ப பாரதியாரும் 'ஆவியினுள்ளும் அறிவடையினிலும் அன்பை வளர்த்திடுவோம்' - என்று அறைகூவல் விடுகிறார்.

பெண்ணுரிமை குறித்த பாரதியின் நிலை ஒரு தாயின் பரிவுடன், தந்தையின் கண்டிப்புடனும் சகோதரனின் சினத்துடனும் சிந்திக்கின்றார். இந்த சிந்தனைக்கு அடிப்படை ஒரு நிகழ்வு. காசியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்கு சென்று திரும்பிய பாரதி கல்கத்தாவில் சகோதரி நிவேதிதாவை சந்திக்கிறார்.பாரதிக்கு ஆசி வழங்கிய நிவேதிதா தேவி மனைவியை ஏன் உடனழைத்து வரவில்லை என்றார்? அதற்கு பாரதி இன்னும் எங்களில் மனைவியரை சரிசமமாக பொதுவிடங்களுக்கு அழைத்துச் செல்லும் வழக்கமில்லை என்று பதிலுரைக்கிறார். இதைக் கேட்டு நிவேதிதா அம்மையாருக்கு வெகு கோபம். 'மகனே! புருஷர்கள் அனேகம் பேர் படித்தும் ஒன்றும் அறியாத சுயநலவெறி கொண்டவர்கள்.ஸ்திரீகளை அடிமைகளென மதிப்பவர்கள். ஒருசிலர் உன்னைப் போன்ற அறிவாளிகள். அவர்களும் கூட இப்படி அறியாமையில் மூழ்கி ஸ்திரீகளுக்கு சம உரிமையும், தகுந்த கல்வியும் கொடுக்காவிட்டால் எப்படி நாடு சமூக சீர்திருத்தம் அடையும்? என்று அன்பாக கடிந்துரைத்துவிட்டு பின்பு போனது போகட்டும் இனிமேலாகிலும் அவளைத் தனியென்று நினைக்காமல் உனது இடக்கை என்று மதித்து, மனதில் அவளை தெய்வமெனப் போற்றி நடந்து வருதல் வேண்டும்'1 என்றாராம். இந்நிகழ்வு பாரதியார்சரித்திரம் என்ற நூலில் செல்லம்மாள் பாரதி குறிப்பிட்டுள்ள செய்தியாகும்.

இந்திய சமுதாயத்தில் பெண்ணுலகின் அவலம் பாரதியின் இதயத்தை உக்கிரமாகத் தாக்கியது. பெண்மையின் செம்மையைப் புரிந்து கொண்டவனாய், பெண்மையைப் போற்றுபவனாய் புதுமைப்பெண் என்ற புதுமைப் படையலை உருவாக்கியவன். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற அடிமை விலங்குகள் பெண்மைக்கு பொன் விலங்குகளாகப் பூட்டப்பட்டிருப்பதை கண்டு பொங்கியெழுந்து,

'நாணுமும் அச்சமும் நாய்கட்க்கு வேண்டுமாம்

ஞான நல்லறம் வீர சுதந்திரம்

பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்' என்று பாடினார்.

பெண்ணின் அடிமைத்தனத்தை ஒழிக்கப் பல்வேறு இலக்கிய வடிவங்களை கையில் எடுத்தவர் பாரதியார். 'பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்; மண்ணுக்குள்ளே சிலமூடர் நல்ல மாதரறிவைக் கெடுத்தார்' என்று பெண்ணின் வீழ்ச்சிக்கான காரணத்தைக் கூறுகிறார். இன்றைய பெண்களிடம் இருக்கவேண்டிய சுயமரியாதை சிந்தனையைப் பாரதியார் பாஞ்சாலி சபதத்தில் பீமன் கதாபாத்திரத்தின் வாயிலாக வெடித்து எழுகிறான். பெண்மை வாழ்க! பெண்மை வெல்க! என்று ஆனந்த கூத்தாடி பாடல்களைப் பாடிய பாரதி

கண்கள் இரண்டில் ஒன்றைக்-குத்தி
காட்சி கெடுத்திட லாமோ?
பெண்க ளறிவை வளர்த்தால்-வையம்
பேதைமை யற்றிடுங் காணீர். - என்று பாடி

பெண்களைப் பேணுமாறு ஆண்களுக்கு அறைகூவல் விடுகிறார்.

**பத்திரிகையும் பாரதியும்**

எட்மண்ட் பர்க் என்பார் 'நாடாளுமன்றத்தில் அரச குடும்பம் (**Royalty**), பிரபுக்கள் சபை (**House of Lords**), பொதுமக்கள் சபை (**House of Commons**) ஆகிய மூன்று தூண்கள் உள்ளன. ஆனால், அங்கே செய்தியாளர்கள் (**Reporters**) அமரும் இடத்தில்தான் இவை மூன்றையும் விட மிக இன்றியமையாததான நான்காம் தூண் உள்ளது' என்று கூறியுள்ளார். அத்தகைய பத்திரிகை பாரதிக்கு சுதந்திரப் போராட்டத்தின் ஆயுதமாக இருந்தது. பத்திரிகைகளின் மூலம் மக்கள் அடிமைத் தன்மையிலிருந்து விடுபட வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினார். அவர் எழுதிய பத்திரிகைகள் தேசிய சுதந்திரம், சமூக சீர்திருத்தம், பெண்களின் உரிமைகள், மற்றும் சாதி ஒழிப்பு போன்ற பல்வேறு கோட்பாடுகளை விளக்கும் கருவியாக இருந்தன.

பாரதியின் எழுத்து வாழ்க்கையில் முக்கியமான பத்திரிகையாக "விஜயா" இருந்தது. 1909-இல் சென்னையிலிருந்து வெளியான இந்தப் பத்திரிகையில், பாரதி தேசிய சிந்தனைகளைப் பரப்பினார். விஜயா பத்திரிகை மூலம் இந்திய விடுதலை பற்றிய எண்ணங்களை மக்களிடையே எடுத்துரைத்தார். இதன் விளைவாக ஆங்கிலேயரின் கோபத்தையும் எதிர்கொண்டார். பத்திரிகையால் மக்களிடையே அவரது எண்ணங்கள் பரவ, ஆங்கிலேய அரசாங்கத்திற்கு அச்சமூட்டியது. இதனால் "விஜயா" ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்டு மூடப்பட்டது."விஜயா" பத்திரிகை கடுமையாகத் தடை செய்யப்பட்டாலும், அதன் தாக்கம் பொதுமக்கள் மனங்களில் சுதந்திரத்தின் தூண்டுகோலாக இருந்தது.

பாரதி 1906-ல் "இந்தியா" என்ற பத்திரிகையில் ஆசிரியராகப் பணியாற்றினார். பாரதியின் எழுத்துலகு வாழ்க்கையில் மிக்க முக்கியமான நிகழ்வாகும். இதழில் வெளியிட்ட கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள் மூலமாக மக்கள் மனதில் தேசிய உணர்வுக்கான விதைகளை விதைத்தார். ஆங்கிலேயர் ஆட்சியை எதிர்த்தும் அவர்களின் அடக்கு முறையைக் கண்டித்தும், மக்களை சுதந்திர போராட்டத்தில் ஈடுபடுத்தியும் தன்னுடைய கருத்துகளை இந்தியா பத்திரிகை மூலம் செயல்படுத்தினார். பெண்களின் உரிமைகள் குறித்து தன் எழுத்துக்களில் தீவிரம் காட்டியவர். ஆணாதிக்கத்திற்கு எதிராகப் பெண்கள் கல்வியிலும் சமுதாயத்திலும் மேம்பாடு அடைய அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்கவும் இந்தியா இதழ் பாரதிக்கு பெரிதும் உறுதுணை புரிந்தது.

சுதந்திர சிந்தனைகளைச் செயல்படுத்த "சுதேசமித்திரன்" பத்திரிகையிலும் செயல்பட்டார். 1904-1907 காலகட்டத்தில் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் அரசியல் மற்றும் சமூக சீர்திருத்தங்களைப் பற்றிய பல்வேறு கருத்துக்களை முன்வைத்து எழுதியுள்ளார். சுதந்திரத்திற்கான குரலாகவும் தேசிய உள்நோக்கங்களுக்கான ஒரு தளமாகவும் இருந்தது.

பாரதியார் பாண்டிச்சேரி சென்ற போது பாண்டிச்சேரியில் 'ஜெகதீசன்' என்ற இதழில் எழுதினார். ஆங்கிலேயர்களுக்கு எதிரான போட்டியில் பிரெஞ்சுக்காரர்கள் இருந்த சூழலில் பாண்டிச்சேரியில் இருந்து பாரதியார் வெளியிட்ட கருத்துக்களை ஆங்கிலேயர்களால் தடுக்க முடியவில்லை. சமுதாய மாற்றத்தின் குரலாக ஜெகதீசன் இதழ் அமைந்தது. சுதந்திரப் போராட்டத்தை மேலும் வலியுறுத்தியும் சமூக சீர்திருத்தங்கள் பற்றிய தெளிவான முன் வைப்பையும் இந்த இதழ் மூலம் மக்களிடையே பரவச் செய்தார்.

ஒரு தனி மனிதனின் முன்னெடுப்பு சமூகத்தை மாற்றும் என்ற கருத்திற்கு பாரதியே சிறந்த சான்றாக திகழ்ந்தார். சமூக முன்னேற்றத்திற்கு தனி மனிதனின் செயல்பாடும் உலகளாவிய சிந்தனையும் மிக முக்கிய காரணமாகும் அத்தகைய உலகளாவிய பொதுநல சிந்தனையோடு செயல்பட்ட சமூக சீர்திருத்தவாதி பாட்டுக்கொரு புலவன் பாரதி.

பாரதியை போற்றுவோம்! சமூகநீதியை காப்போம்!

பார்வை நூல்கள்

1. பாரதியார் சரித்திரம், செல்லம்மாள் பாரதி , (மூன்றாம் பதிப்பு) பாரதி புத்தகாலயம், 2021,சென்னை 18.
2. பாரதியார் கவிதைகள்,பழ அதியமான் (தொ.ஆ.),காலச்சுவடு பதிப்பகம்,2014,நாகர்கோவில் 629 001.
3. பெண் விடுதலை, பாரதியார் ( ஆசிரியர்) , வ உ சி நூலகம், 2013.